# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 073/2017

ஆணை எண். 82/2017

நாள் : 03/05/2017

09/04/2017 நாளிட்ட
டைம்ஸ் ஆப் இண்டியா நாளிதழ் செய்தி. – முறையீடாக பதிவு செய்யப்பட்ட நாளிதழ் செய்தி

மண்டல அலுவலர்,
திரு.வி.க.நகர். மண்டலம்,
மண்டலம் – 6.
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 023. – எதிர் மனுதாரர்

09.04.2017 நாளிட்ட டைம்ஸ் ஆப் இண்டியா நாளிதழில், "சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வில்லிவாக்கம், இராஜாஜி நகர், ரோகிணி தெருவில் உள்ள ரோகிணி பூங்காவினை உடனடியாக புனரமைக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் விருப்பமாக உள்ளனர் எனத் தெரிவித்து செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 7(f)ன் கீழ், மேற்படி நாளிதழ் செய்தி குறித்து நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, 73/2017 எண்ணிட்ட முறையீட்டுமனுவாகப் பதிவு செய்யப்பட்டது. இச்செய்தி குறித்து தண்டையார்பேட்டை மண்டல அலுவலர் தாக்கல் செய்துள்ள அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

09.04.2017 நாளிட்ட டைம்ஸ் ஆப் இண்டியா நாளிதழில், "சென்னை மாநகராட்சி, வில்லிவாக்கம், இராஜாஜி நகர், ரோகிணி தெருவில் உள்ள ரோகிணி பூங்காவினை சிறுவர்கள் விளையாடுவதற்கும், மூத்த குடிமக்கள் காலை, மாலை நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கும் பயன்படும் வகையில் சீரமைக்கப் பட வேண்டும் என அப்பகுதி மக்களின் விருப்பமாக உள்ளனர் எனக் குறிப்பிட்டு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தி சம்பந்தமாக, சென்னை மாநகராட்சி, 6–வது மண்டல அலுவலரின் அறிக்கை கோரப்பட்டு பெறப்பட்டது.

2. சென்னை மாநகராட்சி, 6–வது மண்டலம், வில்லிவாக்கம், இராஜாஜி நகர், ரோகிணி தெருவில் உள்ள ரோகிணி பூங்கா கடந்த சில மாதங்களுக்கு முன் வீசிய வார்தா புயலில் பூங்காவின் பசுமை மற்றும் சிறுவர் விளையாட்டு சாதனங்கள் சிதிலமடைந்தன என்றும் அவைகள் தற்பொழுது சீர்செய்யப்பட்டு பூங்கா நல்ல முறையில் சீரமைக்கப்பட்டுள்ளது என 6–வது மண்டல அலுவலர் தனது 28.04.2017 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், பூங்கா சீரமைப்பதற்கு முன்பு இருந்த நிலையினையும், சீரமைப்பிற்கு பின்பு இருக்கும் நிலையினையும் காட்டும் புகைப்படங்களையும் அனுப்பியுள்ளார். 28.04.2017 அன்று எடுக்கப்பட்ட புகைப்படங்களை நோக்குகையில், பூங்கா நல்லமுறையில் சீரமைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. எனவே, மண்டல அலுவலர் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தற்போதுள்ள நிலையில் பூங்காவினை தொடர்ந்து பராமரித்து சிறுவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில் கண்காணிக்கப்பட வேண்டும் என மண்டல அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு வழங்கப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

3.5.17

4/5/17

பெறுநர்

மண்டல அலுவலர்,
திரு.வி.நகர். மண்டலம்,
மண்டலம் – 6.
சென்னை மாநகராட்சி,
எண்.5, ஆண்டர்சன் தெரு, அயனாவரம்,
சென்னை – 600 023.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்